## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 116/2024**

திரு.கோவிந்தராஜ் (P.W –2) **18.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்து உள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு என்ன தொழில் என்றால் செக்கிங் சென்டரில் வேலைக்குச் செல்கிறேன். வாதிகளை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் என்னுடைய அண்ணன் கிருஷ்ணகுமார் மூலம் 10 வருடங்களுக்கு மேல் தெரியும். அதன் அடிப்படையில் நான் சக்தி கார்டன் மனை எண்.17 கிரயம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். அந்த மனையை நான் கிரயம் பெறுவதற்கு முன்பு அங்கு உள்ள மனைகளை எத்தனை நபர்கள் கிரயம் பெற்று இருப்பார்கள் என்றால் 30 நபர்கள் கிரயம் ஏற்படுத்தியிருந்தார்கள்.

2. சக்தி கார்டனில் கட்டப்பட்டுள்ள வீடுகளை நான் மேற்பார்வையிட்டு வந்தேன் என்றால் தவறு. வீட்டை பூட்டி விட்டு சாவி மட்டும் கொடுப்பார்கள். சக்தி கார்டனில் கிரைய பெற்ற மற்ற கிரையதாரர்கள் சக்தி கார்டனில் உள்ள சாலைகள் சரிவர இல்லை டி டிசிபி அப்ரூவல் ஏற்படுத்தப்படவில்லை, மாநகராட்சி கழிவுநீர் வாய்க்கால் சரிவர இல்லை என்று குற்றச்சாட்டுகள் சுமத்தி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு நாளேடுகளில் அதைப்பற்றி செய்தி வந்தது என்றால் சரி. அங்கு கட்டப்பட்டுள்ள வீடுகளில் கட்டுமானங்கள் சரியாக இல்லை என்று புகார் கொடுத்துள்ளார்கள் அதைப்பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளுக்கும் பிரதிவாதிக்கும் இடையே மனை வீடு கட்டுவது தொடர்பாக ஏற்பட்ட பரிமாற்ற விவரங்கள் மற்றும் 6 லட்ச ரூபாய் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு பிரதிவாதிக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

3. காவல் நிலையத்தில் விசாரணையின் போது பிரதிவாதி வாதிகளுக்கு ரூபாய் 6 லட்சம் கொடுப்பதாக ஒத்துக் கொண்டதாக நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது படி அந்த சமயத்தில் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரி. நான் வாதிகளுக்கு தெரிந்த நபர் என்பதாலும் சக்தி கார்டனில் கட்டப்பட்ட வீடுகளில் சூப்பர்வைசராக இருந்து வந்ததால் வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு பிரதிவாதி வாதிகளுக்கு ரூபாய் 6 லட்சம் கொடுப்பதாக சொல்லவில்லை அம்மாதிரி சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/-கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.